வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 3516 /ஆ4/2024 நாள்: 10.09.2024

| | | |
|---|---|---|
| பொருள் | : | பள்ளிக்கல்வித்துறை –தேர்வுகள் –வேலூர் மாவட்டம் –2024–2025 கல்வியாண்டு –அனைத்து வகை பள்ளி மானவர்களுக்கு காலாண்டுத் தேர்வுகள் நடத்துதல் மற்றும் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுரை – வழங்குதல் –சார்பு |
| பார்வை | : | தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.048688/எம்1/இ1/2024 நாள் 09.09.2024 |

===============

பார்வையில் காணும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க வேலூர் மாவட்டத்தில் 2024–2025 ஆம் கல்வியாண்டிற்கான அனைத்து பள்ளிகளிலும் பயிலும் மாணவர்களுக்குண்டான காலாண்டுத் தேர்வுகள் அட்டவணை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. தேர்வுக்கால அட்டவணையின்படி தேர்வுகள் நடத்தப்பட வேண்டும் மேலும் கீழ்காணும் அறிவுரைகளை பின்பற்றி செயல்படுமாறு அனைத்து வகை பள்ளித்தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

1. பள்ளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வினாத்தாள் கட்டுக்காப்பு மையத்திற்கு சென்று தங்கள் பள்ளிகளுக்கு தேவையான வினாத்தாட்கள் பெறப்பட்டுள்ளதா மற்றும் பாடவரியாக போதுமான வினாத்தாட்கள் உள்ளதா என உறுதி செய்துகொள்ள வேண்டும்.
2. தேர்வுகால அட்டவணையில் தெரிவித்துள்ள நாள் மற்றும் குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே தேர்வுகள் நடத்தப்படவேண்டும்.
3. தேர்வுகள் நடைபெறும் நாட்களில் தேர்வு நேரம் முடிவுற்ற பின்பு தான் மாணவர்களிடமிருந்து விடைத்தாட்கள் வாங்க வேண்டும். தேர்வு நேரம் முடியும் முன்னரே எக்காரணம் கொண்டும் மாணவர்களிடம் இருந்து விடைத்தாட்கள் பெறக்கூடாது.
4. ஒவ்வொரு தேர்வு நடைபெறும் நாள் அன்று காலை 8.00 மணிக்கும், பிற்பகல் 12.00 மணிக்கும் வினாத்தாட்களை வினாத்தாள் கட்டுக்காப்பு மையத்திலிருந்து முகப்பு கடிதத்துடன் தனி நபர் மூலம் வினாத்தாட்கள் பெற்று தேர்வுகள் நடத்தப்பட வேண்டும்.

5. எக்காரணம் கொண்டும் பிற்பகலில் நடைபெறும் தேர்விற்குண்டான வினாத்தாட்களை காலையில் வழங்கக்கூடாது என வினாத்தாள் கட்டுக்காப்புமைய தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.
6. தேர்வுகள் நடைபெறும் நாள் அன்று மீதமுள்ள சார்ந்த பாட வினாத்தாட்களை மந்தன முறையில் தலைமை ஆசிரியர்கள் தங்கள் பாதுகாப்பில் வைத்துக்கொள்ள வேண்டும்.
7. தேர்வுகள் முடியும் முன்பே வினாத்தாட்களை எக்காரணம் கொண்டும் அலைபேசியில் ஆசிரியர்கள் புகைப்படம் எடுக்க கூடாது. மற்றவர்களிடம் பகிரவும் கூடாது என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.
8. காலாண்டுத் தேர்வுகளை எந்தவித புகாருக்கும் இடமளிக்காவண்ணம் நடத்தி முடிக்க அனைத்து வகை பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் மீள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு

1. காலாண்டுத் தேர்வுகள் அட்டவணை

//ஓம்.செ.மணிமொழி //
முதன்மைக்கல்விஅலுவலர்,
வேலூர்

பெறுநர்:

அனைத்து வகை அரசு உயர்/மேல்நிலை/நிதியுதவிப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக்பள்ளி முதல்வர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்:

- மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை/தனியார் ) அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் தெரிவிக்கலாகிறது.
- மாவட்டக் கல்வி அலுவலர்(தொடக்கக்கல்வி )அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.